# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மே மாதம் 22 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 8.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 7/2009

## 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள, "ஏற்பாடுகளுக்கமைய ஒரு சதவீதம் என்ற வீதத்தல் கணக்கிடப் பட்டு, இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத் தாற்றிருத்தப்படுகின்றது :-

"ஏற்பாடுகளுக்கமைய -

(அ) 2009, ஏப்பிறல் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காக ஒரு சதவீதம் என்ற வீதத்திலும் ; அத்துடன்

(ஆ) 2009, மே 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலப் பகுதிக்காக மூன்று சதவீதம் என்ற வீதத்திலும்,

கணக்கிடப்பட்டு, இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோர் ஆளிட மிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும் :-".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் இயைபான கலாண்டுக்கான விபரத்திரட்டானது அத்தகைய காலாண்டின் முடிவை உடனடுத்து தொடங்குகின்ற மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னராக கொடுத்து தவுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்துக் கான அட்டவணை யைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தாற் றிருத்தப்படுகின்றது :-

(1) பாகம் I இல் -

(அ) அதன் (iii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(iii) இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனு மாளினால் எவரேனும் ஏற்றுமதியாள ருக்கு விற்பனை செய்யப்பட்ட -

(i) ஏதேனும் பொருள் ; அல்லது

(ii) எந்த உற்பத்தி செய்யப்பட்ட வேறேதேனும் பொருட்களில் அத்தகைய பொருள் மூலக்கூறு ஒன்றாக இருக்கின்றதோ அந்த உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் வேறு பொருள்,

உண்மையில் இலங்கையிலிருந்து ஏற்று மதி செய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் ஆவணமுறை யான சான்று காண்பிக்கப்படுவதன்மேல் திருப்திப்படின், அத்தகைய பொருள்.".

(ஆ) அதன் (xiv) ஆம் விடயத்தை உடனடுத்துப்பின் வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xv) நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கருத்திற்கொண்டு தோதான அமைச் சரினாலும் நிதி என்னும் விடயத்திற்குப்

பொறுப்பான அமைச்சரினாலும் அங்கீகரிக்கப்பட்ட எந்தக் கருத்திட்டத்தின் மீது வரி அரசாங்கத்தினால் பொறுக் கப்பட்டுள்ளதோ அந்தக் கருத்திட்டத்தில் பயன்படுத்துவதற்கான ஏதேனும் பொருள்.”.

(2) பாகம் II இல், அதன் (xxii) ஆம் விடயத்தை உடனடுத் துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

“(xxiii) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்ட எவரேனும் “பொது விற்பனைகள் முகவரின்” சேவைகள்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்